brv

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**
********

**முறையீட்டு மனு எண்: 254/2015/பே**
**ஆணை நாள்: 11–07–2018**

**திரு. ஆர்.ஜி.மோகன்,**
**சமூக ஆர்வலர்,**
**27, ராகவேந்திரா நகர்,**
**புவனகிரி,**
**கடலூர் மாவட்டம்.** -- முறையீட்டு மனுதாரர்

**செயல் அலுவலர்,**
**புவனகிரி பேரூராட்சி,**
**கடலூர் மாவட்டம்.** -- எதிர் மனுதாரர்

**ஆணை.**

கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி, 27, ராகவேந்திரா நகர் பகுதியினை சேர்ந்த திரு R.G. மோகன், சமூக ஆர்வலர் தனது 17.10.2015 ம் நாளிட்ட முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் 20.10.2015ல் சமர்ப்பித்துள்ளார். மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண். 254/2015 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனுவின் மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு R.G. மோகன் தனது முறையீட்டு மனுவில், கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் மீது கீழ்கண்ட புகார்களை தெரிவித்து, விசாரணை கோரி மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

1. 2012ம் ஆண்டு வரை குடிநீர் கட்டண நிலுவைத் தொகை ரூ.12,36,251/– வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.
2. பேரூராட்சி எல்லைக்குள் வரி விதிப்பிற்கு தகுதியான நிறுவனங்கள் 300க்கு குறைவில்லாமல் உள்ள நிலையில், பேரூராட்சி நிர்வாகத்தினர் 185 வணிக

bry



நிறுவனங்களை மட்டுமே சுட்டிக் காட்டியும், அதிலும் 15 நிறுவனங்களுக்கு மட்டுமே வரி வசூல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. 5 மீன் பிடி குளங்களை குத்தகைக்கு முறையாக விடப்படவில்லை.
4. போலி ரசீதுகள் மூலம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளது.
5. அங்கீகாரம் இல்லாத மனைப்பிரிவுகளுக்கு மின் இணைப்பு பெற போலி ரசீதுகள் பேரூராட்சி ஊழியர்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.
6. கேபிள் ஆபரேட்டர் சேவை வரிகள் வசூலிக்கப்படவில்லை.
7. தொலைபேசி ஆண்டனா டவர்களுக்கு உரிய கட்டணம் வசூல் செய்யவில்லை.

மேற்படி புகார்களை தனது முறையீட்டு மனுவில் தெரிவித்து விசாரணை கோரி இம்முறைமன்ற நடுவத்தில் மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ ஆணைப்படி முறையீட்டு மனுதாரர் திரு.R.G. மோகன், தனது முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் 21.10.2016ல் ஆஜராகி கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தன்னால் பேரூராட்சி அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் சில விவரங்கள் கோரப்பட்டு பெறப்பட்டதாக தெரிவித்துள்ளார். அதில் உள்ளாட்சி நிதி தணிக்கை எந்த காலத்தில் செய்யப்பட்டது, எந்த காலத்திற்குரியது, யாரால் செய்யப்பட்டது என்பது போன்ற விவரங்கள் இல்லை எனவும் குடிநீர் கட்டண நிலுவைத் தொகை 2012- ம் ஆண்டு வரை ரூ.12,36,251/- உள்ளதாகவும் இதுவரை அவைகளை முறையாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சி எல்லைக்குள் தகுதியான வணிக நிறுவனங்கள் 300க்கு குறைவான நிலையில் உள்ளது எனவும், ஆனால் 15 வணிக நிறுவனங்களில் மட்டுமே வரி வசூல் செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் பேரூராட்சியால் கணக்கு காட்டிய 185 நிறுவனங்களில் 170 நிறுவனங்களுக்கு வரி வசூல் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். 5 குளங்களுக்கு மீன் பிடிப்பதற்கு குத்தகைக்கு விடவில்லை எனவும், உதாரணமாக 5 குளங்களில் தாமரைக்குளம் என்பது ரூ.10,000க்கும் குறைவாகவே குத்தகைக்கு எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மனுதாரரால் இது குறித்து மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டதன் அடிப்படையில் தற்போது ரூ.2,15,000/-க்கு ஏலம் விடப்பட்டதாகவும், இது போன்று மீதி குளங்களிலும் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சி மூலம் அமைக்கப்பட்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பொதுமக்களுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுவதாகவும், ஆனால் வசூலிக்கப்பட்ட தொகை பேரூராட்சிக் கணக்கில் சேர்க்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். போலி ரசீதுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த ரசீதுகளை ஒரு வாரத்தில் சமர்ப்பிப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். அரசு அங்கீகாரம் பெறாத மனைப்பிரிவுகளுக்கு மின் இணைப்பு பெற போலி ரசீதுகள் மூலம் வரி ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆதாரங்களை ஒரு வார காலத்தில் அனுப்பிவைப்பதாகவும் தெரிவித்துள்ளார். கேபிள் சேவை வரிகள் வசூலிக்கப்படவில்லை எனவும், இது குறித்து உள்ளாட்சி நிதி தணக்கைத் துறையினராலும் தணிக்கைத் தடை எழுப்பப்பட்டுள்ளதாகவும் அதில் நிதியிழப்பு ரூ.38,500/- எனவும் தெரிவித்துள்ளார். தொலைபேசி ஆண்டனா டவர்களுக்குரிய கட்டணம்

brv



வசூலிக்கப்படவில்லை எனவும், இதன் மூலம் நிதியிழப்பு ரூ. 3,08,000/- எனவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 19.09.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி மனுதாரரின் புகார் குறித்த விரிவான அறிக்கையினை மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு ஆண்டு வாரியான தணிக்கைத் தடைகளை உள்ளடக்கிய அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 19.09.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, 21.10.2016 நாளிட்ட முறையீட்டு மனுதாரரின் வாக்குமூல விளக்கத்தின் நகல் ஆகியவற்றினை கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பிவைத்து புகாரில் தெரிவித்துள்ள இனங்கள் குறித்து தல ஆய்வுமேற்கொண்டும், புவனகிரி பேரூராட்சி ஆவணங்கள், தணிக்கத் தடைகளை கவனத்தில் கொண்டும் பரிசீலித்து பேருராட்சிகளின் உதவி இயக்குநரின் பிரத்யேக குறிப்புகளுடன் அறிக்கை சமர்ப்பிக்க 2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு. 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை தனது கடித ந.க.எண். 479/2017/நாள். 06.10.2017ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

1. தணிக்கை அறிக்கை 2011-12ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குடிநீர் கட்டண நிலுவைத் தொகை (2012 வரை) ரூ.12,36,251/- ல் தற்போது வரை தொடர்ந்து வசூல் செய்யப்பட்டு வருவதாகவும் நிலுவைத் தொகை ரூ.2,12,950/- மட்டுமே உள்ளதாகவும் மேற்படி நிலுவைத் தொகையினை விரைவில் வசூலிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.
2. பேரூராட்சிக்குட்பட்ட 185 கடைகளில் 15 வணிக நிறுவனங்களுக்கு மட்டுமே தொழில் வரி விதிப்பதற்கு தகுதியானதாகிறது எனவும், மீதமுள்ள கடைகள் சில்லறை வியாபாரம் செய்வதால் தொழில் வரி விதிப்பதற்கான வருமானம் ஈட்டாததால் மேற்கண்ட கடைகளுக்கு தொழில் வரி விதிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரத்தினை சுட்டிக்காட்டி 21.01.2016ல் நடைபெற்ற தணிக்கைத் தடை கூட்டமர்வில் இப்பொருள் தொடர்பான தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏதுமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.
3. புவனகிரி பேரூராட்சிக்குட்பட்ட 5 குளங்களில் 4 குளங்கள் (1.செட்டிக்குளம், 2.முத்தால்ராவுத்தர் குளம், 3.சுத்துக்குழி குளம், 4.திம்மிரெட்டிபாளையம் குளம் ) ஆகியவை 2012-13ம் ஆண்டு முதல் 2017-18 ம் ஆண்டு வரை ஏலம் விடப்பட்டு அதற்கான தொகையும் வசூலிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புவனகிரி பேரூராட்சிக்கு சொந்தமான வார்டு-6ல் அமைந்துள்ள தாமரைக்குளம், கடலூர், தென்னாற்காடு மாவட்ட மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமைக்கு குத்தகையாக 1982-83-ஆம் ஆண்டு முதல் 1994-95-ஆம் ஆண்டு வரை குத்தகைத் தொகை நிர்ணயம் செய்து விடப்பட்டுள்ளதாகவும் மேற்படி நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட கால கெடு 1994-95 அம் ஆண்டுடன்

bry



முடிவடைவதால் காலகெடுவினை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து தருமாறு கோரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து புவனகிரி பேரூராட்சியில் நடைபெற்ற 14.09.1994ம் தேதிய மன்றக் கூட்டத்தில் தீர்மான எண் 65-ல் மேற்படி தாமரைக்குளம் மீன் பிடி குத்தகையினை 1994-95ம் ஆண்டிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,500/-

வீதம் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் குத்தகை வசூலிக்க தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 05.11.2017ல் நடைபெற்ற பேரூராட்சிமன்றக் கூட்டத்தில் 1997-98 முதல் 1999-2000 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை விட ஆண்டு ஒன்றுக்கு ரூ.3,000/- வீதமும், ஒவ்வொரு ஆண்டிற்கும் குத்தகைத் தொகையில் 10 சதவீதம் உயர்த்தி வசூலிக்க தீர்மான எண் 82-ன்படி நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புவனகிரி பேரூராட்சியில் 05.08.2010 அன்று நடைபெற்ற பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மான எண். 624-ன்படி 2010-11 முதல் 2014-15 வரை ஐந்து ஆண்டுகளுக்கு மீன் குத்தகையை மீன் வளர்ப்போர் சங்கம் அனுபவித்துக் கொள்வதற்கு ஒப்புதல் அளித்ததாகவும், இதனைத் தொடர்ந்து புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ந.க.எண்.அ.1/339/2010/நாள்.06.08.2010 ல் 2010-11ம் ஆண்டிற்கு குத்தகை தொகை ரூ. 6,050/- என நிர்ணயம் செய்தும் ஒவ்வொரு ஆண்டிற்கும் முந்தைய குத்தகை தொகையை விட உயர்த்தி வசூலிக்கவும் கீழ்கண்ட விவரப்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | ஆண்டு | குத்தகைத் தொகை |
|---|---|---|
| 1. | 2010-11 | 6,050-00 |
| 2. | 2011-12 | 6,655-00 |
| 3. | 2012-13 | 7,320-00 |
| 4. | 2013-14 | 8,052-00 |
| 5. | 2014-15 | 8,857-00 |
| | மொத்தம் | 36,934-00 |

மேற்படி தாமரைக்குளத்தினை தனி அலுவலர், தென்னாற்காடு மாவட்டம் மீன் வளர்ப்போர் கூட்டுறவு சங்கம், 2015-16ம் ஆண்டுகளுக்கு பேரூராட்சியில் ஒப்படைக்காததாலும், 2015-16ம் ஆண்டு பெய்த கன மழையின் காரணமாகவும் தாமரைக்குளத்தில் அதிகமான நீர் இருந்த காரணத்தினால் மீன் பிடி குத்தகை ஏலம் விடப்பட்டால் தண்ணீரை இறைத்து மீன் பிடித்தால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் கால்நடைகளும் தண்ணீர் இன்றி சிரமத்திற்குள்ளாகும் என பொதுமக்களிடமிருந்து புகார் வந்ததாலும் 2016-17 ம் ஆண்டு மீன்பிடி குத்தகை பொது ஏலத்தில் விட பேரூராட்சி மன்றத்தால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு 06.07.2016ம் தேதியில் தாமரைக்குளம் பொது ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டு அதிக ஏலத் தொகை கட்ட திரு பழனி (எ) கணேசன் என்பவருக்கு ரூ.2,15,000/-க்கு ஒப்படைக்கப்பட்டு ஏலத் தொகை முழுவதும் 06.07.2016 அன்று. செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தாமரைக்குளம் மீன்பிடி குத்தகை தொடர்பாக புவனகிரி பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

bry



4.பேரூராட்சி மூலம் அமைக்கப்பட்ட குடிநீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு உரிய இணைப்புக் கட்டணத்துடன் 3 மாதங்களுக்கு குடி நீர் கட்டணம் முன்பணமாகவும் பெறப்பட்டு இணைப்பு வழங்கப்பட்டு வருவதாகவும், கணக்கில் இல்லாத குடிநீர் இணைப்புகள் கண்டறியப்படின் அபராத தொகையுடன் இணைப்பு முறைப்படுத்தப்படுவதாகவும், மேலும் இதற்கு காரணமாக இருந்த பேரூராட்சி ஊழியர்கள் மீது உரிய நடவடிக்கையும் எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புவனகிரி பேரூராட்சிக்குட்பட்ட மனைப்பிரிவு அங்கீகாரம் பெறாத மனைப்பிரிவுகளுக்கு மின் இணைப்பு பெற போலி ரசீது குறித்து அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5.கேபிள் ஆபரேட்டர்கள் சேவை வரி வருவாய்த்துறை மூலம் வசூலிக்கப்படுவதாகவும் தொலைபேசி ஆண்டனா டவர்களுக்கு சொத்து வரி வசூல் செய்ய விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது 13.04.2018ம் நாளிட்ட கடிதத்தில், மேற்படி பொருள் குறித்து 13.04.2018ல் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் விசாரணை மேற்கொண்டதாகவும், மேற்படி விசாரணையில் முறையீட்டு மனுதாரர் மற்றும் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கம் அளித்ததாகவும் தெரிவித்து மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொண்டதற்கான தனது விசாரணை அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1.தணிக்கை அறிக்கை 2011-12ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குடிநீர் நிலுவைக் கட்டணம் ரூ.12,36,251/- ல் பெரும்பாலான தொகை ரூ.11,27,851/- வசூல் செய்யப்பட்டு தற்போது ரூ.1,08,400/- மட்டுமே நிலுவையாக உள்ளதாகவும் மேற்படி நிலுவைத் தொகையினை விரைவில் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

2.பேரூராட்சிக்குட்பட்ட 185 கடைகளில் 15 வணிக நிறுவனங்களுக்கு மட்டுமே தொழில் வரி விதிப்பதற்கு தகுதியாக உள்ளதாகவும் மீதமுள்ள கடைகள் யாவும் சில்லறை வியாபாரம் செய்வதால் தொழில் வரி விதிப்பதற்கான வருமானம் ஈட்டப்படாததால் மேற்கண்ட கடைகளுக்கு தொழில் வரி விதிக்கப்படவில்லை எனவும் இது சம்பந்தமாக நிலுவையில் இருந்த தணிக்கைத் தடையினை 20.01.2016ல் நடைபெற்ற கூட்டரில் மேற்கண்ட விவரத்தினை தெரிவித்து தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதனால் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3.புவனகிரி பேரூராட்சிக்குட்பட்ட 5 குளங்களில் 4 குளங்கள் (1.செட்டிக்குளம், 2.முத்தாலம்மன் குளம், 3. சத்துக்குழிக் குளம், 4. திம்மிரெட்டிபாளையம் குளம்) ஆகிய குளங்கள் 2012-13 முதல் 2017-18ம் ஆண்டு வரை ஏலம் விடப்பட்டு தொகையும் வசூலிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தாமரைக்குளத்தினை தனி அலுவலர், தென்னாற்காடு மாவட்ட மீன் வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் 2015-16ம் ஆண்டுகளுக்கு பேரூராட்சியில் ஒப்படைக்காததாலும், 2015-16ம் ஆண்டு பெய்த கனமழையின் காரணமாகவும் தாமரைக்குளத்தில் அதிகமான நீர் இருந்த காரணத்தினால்

bry



மீன்பிடி குத்தகை ஏலம் விடப்பட்டால் தண்ணீரை இறைத்து மீன் பிடித்தால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கும், ஆடு, மாடுகள் தண்ணீர் இன்றி சிரமத்திற்குள்ளாகும் என பொது மக்களிடமிருந்து புகார் வந்ததாலும், மேற்படி 2016–17 ஆண்டிற்கு மீன்பிடி குத்தகை பொது ஏலத்தில் விட பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின்படி தாமரைக் குளம் மீன் பிடி குத்தகை ஏலம் 06.07.2016 அன்று விடப்பட்டு அதிக ஏலத் தொகையான ரூ. 2,15,000/–க்கு ஏலம் எடுத்த திரு.பழனி (எ) கணேசன் என்பவரிடமிருந்து ஏலத் தொகை முழுவதும் 06.07.2016 அன்றே பேரூராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி குளத்தினை பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையிலேயே ஒவ்வொரு ஆண்டும் குத்தகைத் தொகையினை நிர்ணயம் செய்து குத்தகைத் தொகையினை நிலுவையின்றி வசூலித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

4. புவனகிரி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு உரிய இணைப்புக் கட்டணத்துடன் 3 மாதங்களுக்கு குடிநீர் கட்டணம் முன் பணமாகவும் பெறப்பட்டு இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், கணக்கில் இல்லாத குடிநீர் இணைப்புகள் கண்டறியப்படின் அபராதத் தொகையுடன் இணைப்பு முறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், இதற்கு காரணமாக இருந்த பேரூராட்சி ஊழியர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புவனகிரி பேரூராட்சிக்குட்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்கு மின் இணைப்பு பெற ரசீது வழங்கப்பட்டது தொடர்பாக வரித்தண்டலர்களான திரு க.இசையமுது மற்றும் திரு.ஆ.செல்வராஜ், ஆகியோர்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. கேபிள் ஆபரேட்டர்கள் சேவை வரி வசூல் வருவாய்த்துறை மூலம் வசூலிக்கப்படுவதாகவும், தொலைபேசி ஆண்டனா டவர்களுக்கு சொத்து வரி வசூல் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது விசாரணை மற்றும் ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேற்படி பொருள் தொடர்பாக புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் 06.07.2018மற்றும் 10.07.2018 ஆகிய தேதிகளில் வரப்பெற்ற கடிதங்களில் (மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது) சில கூடுதல் விவரங்களை தெரிவித்து கீழ்கண்டவாறு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இதில் ஏற்கனவே தெரிவித்த விவரங்களுடன், புவனகிரி பேரூராட்சி தாமரைக்குளத்தில் மீன்பிடி ஏலம் தொடர்பாக 2016–17ம் ஆண்டில் ஏலம் எடுத்த திரு. பழனி (எ) கணேசன் என்பவருக்கு 2017–18ம் ஆண்டிற்கான மீன்பிடி குத்தகை புதுப்பித்து வழங்கப்பட்டதாகவும், அதற்கான தொகை ரூ.2,47,250/– ஐ சம்பந்தப்பட்டவர் ரொக்கமாக புவனகிரி பேரூராட்சிக் கணக்கில் செலுத்து சீட்டு.எண்.437/நாள்.15.09.2017ல் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, புகார் மனுவிற்கான புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையிட்டு மனுதாரரின் வாக்குமூலம் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் விசாரணை அறிக்கை மற்றும்

bry



புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் 06.07.2018ம் தேதிய கூடுதல் விவர அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள குறைபாடுகள் யாவும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் பெறப்பட்ட புவனகிரி பேரூராட்சியின் 12-13ம் ஆண்டின் தணிக்கை அறிக்கையின் அடிப்படையிலேயே புகாராக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் முறையீட்டு மனுதாரர் தனது 21.10.2016ம் தேதிய நேரடி விளக்கத்தில் தெரிவித்துள்ளவாறு எந்த ஆதார ஆவணங்களையும் இதுவரை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை. மேலும் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் மேற்படி புகார்களுக்கான விளக்க அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இப்புகார் சம்பந்தமாக கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் 13.04.2018ல் நடத்தப்பட்ட விசாரணையில், முறையீட்டு மனுதாரரும் கலந்து கொண்டு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் விளக்கங்களை ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு அதற்கான முறையீட்டு மனுாரரின் ஒப்புதலை பெற்று அதன் ஒளி நகலினையும் சமர்ப்பித்துள்ளார். புகார் அளிக்கப்பட்ட பின்னர் குடிநீர் நிலுவைக் கட்டணம் ரூ.11,27,851/-/- வசூலிக்கப்பட்டு நிலுவை ரூ.1,08,400/-மட்டுமே உள்ளதாகவும், 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டுகளில் மீன்படி குத்தகை ஏலம் விடப்பட்டு முறையே ரூ.2,15,000/-மற்றும் ரூ.2,47,250/- வருவாய் ஏற்பட்டுள்ளதுடன், இனி வருங்காலங்களில் இது போன்ற புகார்களுக்கு இடமளிக்காவண்ணம் செயல்படவும், எனவே நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணம் ரூ.1,08,400/- மற்றும் 2017-18ம் ஆண்டிற்கான அலைபேசி டவர் கேட்பு தொகை ரூ3,466/- போன்றவற்றினை உரிய விதிகளின்படி தாமதமின்றி வசூலிக்க விரைவு நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட வேண்டுமெனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11 -ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது.

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்**

**-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-**

செயலாளர்.

பெறுநர்.

1.திரு.R.G. மோகன்,
சமூக ஆர்வலர்,
கடல் அலைமின் உற்பத்தி ஆய்வாளர்,
27, ராகவேந்திரா நகர்,
புவனகிரி,
கடலூர் மாவட்டம் - 608 601.

2.பேரூராட்சி செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கடலூர் மண்டலம்,
Old Nattanmai Building,
Beach Road, Cuddalore- 607 001.